இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை – 2008 (கல்வித்தவணை II)

**ESP 1263/2253** – கலைத்திட்டமும் கற்றல் மதிப்பீடும்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

---

திகதி: 07.12.2008 | நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

---

மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.
ஒவ்வொரு விடையும் வெவ்வேறு புத்தகத்தில் எழுதப்படல் வேண்டும்.

1. (i) ஆசிரியர் கல்வியாளர்கட்கு கலைத்திட்டக் கற்கை ஏன் அவசியம் எனக்காட்டுவதற்கு ஐந்து(5) காரணங்கள் தருக.
   (ii) கலைத்திட்ட எண்ணக்கருக்களில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குக.
   (iii) கலைத்திட்டம் ஒன்றினை அபிவிருத்தி செய்கையில் "மாதிரி" ஒன்றினைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் யாது?
   (iv) வீலர் இனதும் லோவ்டன் இனதும் கலைத்திட்ட மாதிரிகளிலுள்ள பிரதான இயல்புகளை விபரித்து ஆராய்க.
   (v) இலங்கையின் இடைநிலைக் கலைத்திட்டத்தில் இவ்வியல்புகள் எந்தளவு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பதை ஆராய்க.

2. "தற்போது கலைத்திட்ட அபிவிருத்தியானது மிகவும் சிக்கலான நடவடிக்கையாகும்."
   (i) மேற்படி கூற்றை ஆராய்க.
   (ii) கலைத்திட்ட ஒழுங்கமைப்புத் தொடர்பாக கலைத்திட்ட பிரதான அம்சங்களை இனங்காண்க.
   (iii) குறிப்பான இலக்குக் குழு ஒன்றிற்குக் கலைத்திட்டம் ஒன்றினை ஒழுங்கமைக்கையில் கலைத்திட்ட அபிவிருத்தியாளர் எதிர்நோக்கும் நான்கு பிரச்சனைகளைக் குறிப்பிடுக.
   (iv) மேலுள்ள பிரச்சனையை வெற்றி கொள்வதற்குக் கலைத்திட்ட அபிவிருத்தியாளருக்கு எவ்வாறு ஆலோசனை வழங்குவீர்?
   (v) உமது ஆலோசனையின் அடிப்படையில், கலைத்திட்டம் ஒன்றினை ஒழுங்கமைக்கையில் கவனம் எடுக்கப்படவேண்டிய பொருத்தமான கோட்பாடுகள் ஐந்தினைப் பட்டியற்படுத்தி விளக்குக.

3. (i) கலைத்திட்ட மதிப்பீடு என்பதனால் யாது விளங்குகின்றீர் என்பதனை விளக்குக.
   (ii) கலைத்திட்ட மதிப்பீட்டில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் நுட்பங்களையும், கருவிகளையும் விபரிக்க.

ம.ப.பா.

(iii) கலைத்திட்டம் ஒன்றினை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மாதிரி ஒன்றைப் பெயரிடுக. கலைத்திட்டம் ஒன்றினை மதிப்பிடுவதற்கு அம்மாதிரியினை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதனை விளக்குக.

(iv) மேற்படி மாதிரியைப் பயன்படுத்தி உமது நிறுவனத்தின் கலைத்திட்டத்தினை மதிப்பிடுக.

4. (i) கலைத்திட்டத்தில் மாற்றங்களை முகாமை செய்தல் எனும் எண்ணக்கருவை விளக்குக.
(ii) இலங்கையில் ஆசிரிய பயிற்சி கலைத்திட்டத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களைப் பட்டியற்படுத்துக.
(iii) பாடசாலை/நிறுவன மட்டத்தில் கலைத்திட்ட முகாமை செய்வதில் ஆசிரியரின் வகிபங்கினை ஆராய்க.
(iv) எதிர்பார்க்கப்பட்ட முகாமைத்துவ வகிபங்கினை கொண்டு செல்கையில் ஆசிரியர் ஒருவர் எதிர்நோக்கும் தடைகளை விளக்குக.
(v) உங்களால் இனங்காணப்பட்ட தடைகளை வெற்றி கொள்ளுவதற்கு உங்களது ஆலோசனைகளைத் தருக.

5. (i) ஆசிரியர்களையும், ஆசிரியர் கல்வியாளர்களையும் மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தக்கூடிய நான்கு முறைகளை விபரிக்குக.
(ii) அம் மதிப்பீட்டு முறைகள் ஒவ்வொன்றிலுமுள்ள பயலங்களையும், பலவீனங்களையும் பரீட்சிக்க.
(iii) (அ) வரலாறு பாடத்தில் தரம் 9 இலுள்ள 40 மாணவர்கள் பெற்றுக்கொண்ட 05 – 100 க்கிடையிலான புள்ளிகள் தொகுதி ஒன்றினைத் தயாரிக்குக.

(ஆ) இவ் வகுப்பு மாணவர்களின் ஆற்றுகையினைப் பகுப்பாய்வு செய்யுமாறு நீங்கள் கேட்கப்பட்டுள்ளீர்கள். மாணவர்களின் ஆற்றுகையினைப் பகுப்பாய்வு செய்வதற்கு பிரயோகிக்கக்கூடிய புள்ளிவிபர நுட்பங்களைக் குறிப்பிடுக.

(இ) இப்புள்ளிவிபர நுட்பங்களை மாணவர்களின் ஆற்றுகையினைப் பகுப்பாய்வு செய்வதற்கு எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதனை விளக்குக.

6. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச்(03) சிறு குறிப்பு எழுதுக.

(i) இடையிட்ட, இறுதி, ஏற்பாடு(placement) மதிப்பீடு.
(ii) கிடை, நிலைக்குத்து கலைத்திட்டம்.
(iii) இந்தியாவின் ஆசிரியர் கல்வி கலைத்திட்டம்
(iv) சகபாடி(Peer) மதிப்பீடு.
(v) கலைத்திட்ட புத்தாக்கத்தில் ஆசிரியரின் வகிபங்கு.

(பதிப்புரிமையுடையது)